6984
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்
27 DEC 2022
039167
எம்.ஆர்.சி. நகர், சென்னை-28
B2

**சுருக்கம்**

பணியமைப்பு – ஓய்வூதியம் – மறைமலைநகர் நகராட்சி – திரு.சி.குப்பன், தூய்மைப் பணியாளர் – 30.04.2019–ல் சுய விருப்ப ஓய்வு பெற அனுமதித்தது – அரசின் தளர்வாணை வழங்கக் கோருவது – அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப. 3) துறை**

**அரசாணை (ப) எண். 466.**

**நாள் : 23.12.2022**
**சுபகிருது வருடம்,**
**மார்கழி திங்கள், 8 ஆம் நாள்,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2053**

**படிக்கப்பட்டது.**

நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க. எண். 25010/2022/பி2, நாள்: 29.08.2022.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதத்தில், திரு. சி. குப்பன், தூய்மைப் பணியாளராக மறைமலைநகர் நகராட்சியில் பணிபுரிந்து வந்த நிலையில் 30.04.2019 பிற்பகல் சுயவிருப்ப ஓய்வு பெற மறைமலைநகர் நகராட்சி ஆணையரின் செயல்முறை ந.க.எண். 4135/2018/ சி1, நாள்: 27.06.2022–ல் அனுமதித்து உத்திரவிடப்–பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

2. மறைலைநகர் நகராட்சி ஆணையர், தமது முன்மொழிவில், திரு. சி. குப்பன் மறைமலைநகர் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து 30.04.2019 பிற்பகல் சுய விருப்ப ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டு சுய விருப்ப ஓய்வில் சென்றதாகவும், திரு. சி. குப்பன், தூய்மைப் பணியாளரின் (சுய விருப்ப ஓய்வு) ஓய்வூதிய முன்மொழிவு இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது எனவும், பணியாளரின் பணி நியமனம் மற்றும் உச்சநீதிமன்ற வழக்கு குறித்த விவரத்தினை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் கோரப்பட்டதைத் தொடர்ந்து கூடுதல் விவரங்களுடன் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறைக்கு முன்மொழிவு மீள சமர்ப்பிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் கடிதம் மூ.மு. எண். 22966 / ந.ஓ.ச (2) /2021, நாள். 14.12.2021–ல், அடிப்படை விதி 56(3)–ன்படி சுய விருப்ப ஓய்வு நோட்டீஸ் காலமான மூன்று மாத காலத்தில் சம்பளமில்லா விடுப்பு

துய்க்கக் கூடாது என்ற நிபந்தனைக்கு மாறாக, தனியர் 01.07.2018 முதல் 31.03.2019 முடிய சம்பளமில்லா விடுப்பு துய்த்துள்ளதாக ஆணையரால் சான்று அளிக்கப்பட்டுள்ளதால், விதிகளுக்குப் புறம்பாக விடுப்பு துய்க்கப்பட்டதற்கு அரசின் தளர்வாணை பெறப்பட்டு அனுப்பிடும் நேர்வில், அன்னாருக்கு ஓய்வூதியம் அனுமதிப்பது குறித்த நடவடிக்கை எடுக்கப்படும் என இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் தெரிவிக்கப்பட்டு மறைமலைநகர் நகராட்சி ஆணையரின் முன்மொழிவு திருப்பப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

4. திரு. சி. குப்பன், தூய்மைப் பணியாளர் நோய்வாய்ப்பட்டு மிகவும் மோசமாக படுத்த படுக்கை நிலையில் இருந்ததன் காரணமாக, பணிக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதனைத் தொடர்ந்து, சம்பளமில்லா விடுப்பு எடுக்க வேண்டியதாயிற்று என தனியரால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது, எனவே, இதனை சிறப்பினமாகக் கருதி திரு. சி. குப்பன், தூய்மைப் பணியாளர் என்பவருக்கு ஓய்வூதியம் அனுமதிக்கும் பொருட்டு, அரசின் தளர்வாணை பெற்று வழங்குமாறு கோரியுள்ள மறைமலைநகர் நகராட்சி ஆணையரின் கருத்துருவினை செங்கற்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மேலனுப்பியுள்ளார் எனத் தெரிவித்து, தனியருக்கு ஓய்வூதியம் அனுமதிக்கும் பொருட்டு அரசின் தளர்வாணை வேண்டி வரப்பெற்ற முன்மொழிவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அரசுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

5. இந்நேர்வினை அரசு சுயமாகவும், கவனமாகவும் ஆய்வு செய்ததில், விருப்ப ஓய்வு நோட்டீஸ் காலமான மூன்று மாத காலத்தில் எந்தவொரு ஊதியமில்லா விடுப்பும் எடுக்க கூடாது என அரசாணை (நிலை) எண்.376, ப.(ம)நி.சீ (அவி.III) துறை, நாள்: 11.12.1995–இல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால், திரு. சி. குப்பன், தூய்மைப் பணியாளர், மறைமலைநகர் நகராட்சி என்பவர் 30.04.2019 பி.ப. சுய ஓய்வில் செல்வதற்கு முன்னர், படுத்த படுக்கையில் இருந்த காரணத்தினால் 01.07.2018 முதல் 31.03.2019 வரை ஊதியமில்லா விடுப்பில் இருந்துள்ள நிலையில், அரசாணை (நிலை) எண்.376, ப.(ம)நி.சீ (அவி.III) துறை, நாள்: 11.12.1995–ஐ ஒரு சிறப்பினமாகக் கருதி, மறைமலை நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணியாற்றி சுயவிருப்ப ஓய்வில் சென்ற திரு. சி. குப்பன், என்பவர் பொருட்டு தளர்வு செய்தும், தனியரை சுயவிருப்ப ஓய்விற்கு அனுமதித்த மறைமலைநகர் நகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண். 4135/2018/C1, நாள்: 30.04.2019–க்கு பின்னேற்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலும், இது போன்ற அனைத்து நேர்வுகளிலும் விதிகளின் அடிப்படையில் மட்டுமே பரிசீலிக்க வேண்டும் என்றும், எந்த சூழ்நிலையிலும் விதிகளை மீறக் கூடாது என்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளை வலியுறுத்தி சுற்றறிக்கை அனுப்புமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சிவ் தாஸ் மீனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600 028.

இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 35.

**நகல்**

மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும்
குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 009.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.மு. 2) துறை,
சென்னை – 09.

இருப்பு கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23.12.2022

பிரிவு அலுவலர்.

Office of the Director of
Municipal Administration
Ch-28
Date: 12.2022.

Endt Roc no 39167 /2022/B2

Copy communicated for taking necessary action.

28/12/2022
For Director of Municipal
Administration
28/12/2022 28/12/2022.

To,
The Mpl. Commr
Maraimalai Ngr.